# ஒரு பிணை நபராக இருப்பதைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

**அக்டோபர் 2024**

## ஒரு பிணை நபராக உங்கள் பங்கு என்ன?

ஒரு பிணை நபராக, நீங்கள் தடுப்புக்காவலில் உள்ள நபர் தனது விடுவிப்பு ஆணையின் அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றுவதை உறுதிசெய்ய பணத்தை வைப்புத் தொகையாக செலுத்துவீர்கள் மற்றும்/அல்லது பணம் செலுத்துவதாக உறுதியளிப்பீர்கள். தடுப்புக்காவலில் உள்ள நபருக்கு வாழ்வதற்கான இடத்தை வழங்குவதையும் நீங்கள் பரிசீலிக்கலாம்.

இந்த வழக்கை விசாரிக்கும் குடிவரவு பிரிவு (ID) உறுப்பினர், மற்ற நிபந்தனைகளுடன் நீங்கள் வழங்க உத்தேசிக்கும் சலுகை, தடுப்புக்காவலுக்குப் பொருத்தமான மாற்றாக உள்ளதா என்பதை முடிவு செய்வார்.

அந்த நபர் அனைத்து விடுவிப்பு நிபந்தனைகளுக்கும் கீழ்ப்படியவில்லை என்றால், கனடா எல்லை சேவைகள் நிறுவனம் (CBSA) நீங்கள் வைப்புத் தொகையாக செலுத்திய மற்றும்/அல்லது செலுத்துவதாக உறுதியளித்த பணத்தை தன்வசம் வைத்திருக்கக்கூடும். அந்த நபர் விடுவிப்பு ஆணைக்கு இணங்கவில்லை என உங்களுக்குத் தெரிந்தால், ஒரு பிணை நபராக உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு அதை உடனடியாக CBSA-க்கு தெரிவிக்க வேண்டும்.

## எது உங்களைப் பொருத்தமான பிணை நபராக மாற்றுகிறது?

தடுப்புக் காவல் மறுஆய்வு விசாரணையில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும், மேலும் நீங்கள் சாட்சியமளிக்க தயாராக இருக்க வேண்டும். ஒரு பிணை நபராக உங்கள் தகுதியை மதிப்பிட உங்கள் சாட்சியம் ID உறுப்பினருக்கு உதவும்.

ஒரு பிணை நபராக உங்கள் தகுதியை தீர்மானிப்பதில் உறுப்பினர் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளக்கூடிய சில காரணிகளில் பின்வருபவை மட்டுமல்லாது பிற காரணிகளும் உள்ளடங்கும்:

- ஒரு கனடிய குடிமகனாக அல்லது கனடாவில் நிரந்தரமாக வசிப்பவராக இருந்து, செயல்திறன் பத்திரத்தை (உத்தரவாதம்) செலுத்துவதாக உறுதியளித்தால்
- குறைந்தது 18 வயது இருக்க வேண்டும்
- தற்போது கனடாவில் வசித்துக்கொண்டிருந்து செயல்திறன் பத்திரத்தை (உத்தரவாதம்) செலுத்துவதாக உறுதியளித்தால்,
- தடுப்புக்காவலில் உள்ள நபரை அறிந்திருத்தல்
- உங்கள் சொந்த விருப்பத்துடன் முன்வருதல்
- உங்கள் சொந்தப் பணத்தை வைப்புத்தொகையாக செலுத்தவோ அல்லது உங்கள் சொந்தப் பணத்தைச் செலுத்துவதற்கான உறுதி மொழி பத்திரத்தில் கையொப்பம் இடவோ விருப்பம் தெரிவித்தல்
- தடுப்புக்காவலில் உள்ள நபரை மேற்பார்வை செய்தல்
- தடுப்புக்காவலில் உள்ள நபருக்குத் தங்குமிடம் வழங்குதல்

## எவ்வளவு பணம் தேவைப்படும்?

நீங்கள் வைப்புத்தொகையாகச் செலுத்த விரும்பும் மற்றும்/அல்லது செலுத்துவதாக உறுதியளிக்கும் பணத்தின் அளவைத் தீர்மானிப்பது உங்கள் முடிவுக்கு உட்பட்டதாகும். தடுப்புக்காவல் மறுஆய்வு விசாரணையில், ID உறுப்பினர் வைப்புத்தொகையாக செலுத்த வேண்டிய அல்லது உறுதியளிக்க வேண்டிய இறுதித் தொகையை முடிவு செய்வார்.

## பத்திரங்களின் வகைகள் என்னென்ன?

2 வகையான பத்திரங்கள் உள்ளன:

- பணப் பத்திரங்கள் (வைப்புத் தொகைகள்)
- செயல்திறன் பத்திரங்கள் (உத்தரவாதங்கள்)

## ரொக்கப்பத்திரம் (வைப்புத் தொகை) என்றால் என்ன?

ரொக்கப் பத்திரம் என்பது நீங்கள் பிணை நபராக செயல்படும் காலத்தில் CBSA விற்கு வைப்புத் தொகையாக செலுத்தும் பணமாகும்.

தடுப்புக்காவல் மறுஆய்வு விசாரணையில் பத்திரத் தொகையை ID உறுப்பினர் தீர்மானிப்பார். பணப் பத்திரங்களுக்கான வைப்புத் தொகையைச் செலுத்தும் முறை பற்றி உங்களுக்கு ஆலோசனை வழங்குவது CBSA இன் பொறுப்பாகும்.

நீங்கள் வைப்புத்தொகையாக அளிக்கும் ரொக்கப் பத்திரம் உங்கள் சொந்தப் பணமாக இருக்க வேண்டும் மற்றும் தடுப்புக் காவலில் உள்ள நபரின் பணமாக இருக்கக்கூடாது. இந்தப் பணம் வைப்புத் தொகையாக செலுத்தப்படும் வரை தடுப்புக் காவலில் உள்ள நபர் காவலில் இருந்து விடுவிக்கப்படமாட்டார். வைப்புத் தொகை செலுத்தும் முறைகள் CBSA ஆல் நிர்வகிக்கப்படுகின்றன.

## செயல்திறன் பத்திரம் (உத்தரவாதம்) என்றால் என்ன?

ஒரு செயல்திறன் பத்திரம் என்பது, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நபர் அவருடைய விடுவிப்பு நிபந்தனைகளை மதிக்காத பட்சத்தில், CBSA க்கு நீங்கள் செலுத்துவதாக உறுதியளிக்கும் பணமாகும்.

நீங்கள் ஒரு பிணை நபராகச் செயல்படும் போது, அந்த நபர் அவருடைய விடுவிப்பு ஆணையின் நிபந்தனைகளை மதிக்காத பட்சத்தில் நீங்கள் செலுத்துவதாக உறுதியளிக்கும் பணத்தை இழக்க நேரிடும். தடுப்புக்காவல் மறுஆய்வு விசாரணையில் பத்திரத் தொகையை ID உறுப்பினர் தீர்மானிப்பார்.

செயல்திறன் பத்திரம் தொடர்பான உங்கள் உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதற்கான உங்கள் திறனை CBSA மதிப்பிடும். எடுத்துக்காட்டாக, நீங்கள் தகுதிபெறும் தொகையானது உங்கள் தற்போதைய சொத்துக்களை நிரூபிக்க நீங்கள் வழங்கும் வீட்டு உரிமைச் சான்று அல்லது ஆண்டு வருமானம் போன்ற ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரத்தைப் பொறுத்து அமையும். உங்களிடம் வருமானம் அல்லது சொத்துக்கள் இல்லையென்றால், செயல்திறன் பத்திரத்தை அளிக்க நீங்கள் தகுதி பெறாமல் போகக்கூடும் .

## ஒரு பிணை நபராக உங்கள் பொறுப்புகள் எப்போது முடிவடையும்?

ஒவ்வொரு வழக்கும் வேறுபட்டதாகும் மற்றும் உங்கள் பொறுப்புகள் எப்போது முடிவடையும் என்பதற்கான கால வரையறை எதுவும் இல்லை.

நீங்கள் மேற்பார்வையிடும் நபர் அவருடைய விடுவிப்பு ஆணையின் அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றினால் மட்டுமே இந்தக் காலகட்டத்தின் முடிவில் உங்கள் பணத்தை நீங்கள் திரும்பப் பெறுவீர்கள். அந்த நபர் விடுவிப்பு ஆணையின் ஏதேனும் ஒரு நிபந்தனையை மீறினால், நீங்கள் வைப்புத்தொகையாக செலுத்திய மற்றும்/அல்லது செலுத்துவதாக உறுதியளித்த பணத்தை இழக்க நேரிடும்.

## நீங்கள் நிபந்தனையை மாற்ற விரும்பினால் அல்லது ஒரு பிணை நபராக செயல்படுவதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ள நினைத்தால் என்ன செய்ய வேண்டும்?

ஒரு நபரின் குடியேற்ற விவகாரங்கள் முடிவடையும் வரை நீங்கள் ஒரு பிணை நபராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு புதிய பிணை நபருக்கான முன்மொழிவு போன்ற விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், ID உறுப்பினர் உங்களை பிணை நபராக இருப்பதிலிருந்து நீக்கலாம்.

இந்த விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், நீங்கள் இனி ஒரு பிணை நபராக செயல்பட விரும்பவில்லை என்றால், நீங்கள் ID க்கு எழுத்துப்பூர்வமாக விண்ணப்பிக்க வேண்டும். உங்கள் விண்ணப்பத்தின் நகல்களை CBSA மற்றும் சம்பந்தப்பட்ட நபருக்கு அல்லது கோரிக்கை அளிக்கும் பட்சத்தில் அவர்களின் ஆலோசகருக்கும் நீங்கள் அனுப்ப வேண்டும்

உங்கள் கோரிக்கை ஏற்கப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. சில சமயங்களில் ஒரு புதிய விசாரணை தேவைப்படலாம், அல்லது ஒரு விசாரணை நடைபெறாமலே, கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படலாம் அல்லது எழுத்துப்பூர்வமாக மறுக்கப்படலாம்.

உங்கள் விண்ணப்பத்தைத் தயார் செய்யும் போது, விடுவிப்பு ஆணையின் நிபந்தனைகளை மாற்றுவதற்கான விண்ணப்பத்தைப் பயன்படுத்த நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்: https://irb-cisr.gc.ca/en/forms/Documents/Application%20to%20vary%20 release%20conditions%20form%20(EN).pdf. உங்கள் விண்ணப்பத்தை எவ்வாறு சமர்ப்பிப்பது என்பது பற்றிய விரிவான தகவல்களும் இந்தப் படிவத்தில் உள்ளடங்கும்.

## மேலதிகத் தகவல்களை நீங்கள் எங்கே பார்க்க முடியும்?

தடுப்புக்காவல் மறுஆய்வுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, பின்வரும் தலைப்புகளைப் பார்க்கவும் நீங்கள் என்ன செய்ய வேண்டும்தடுப்புக் காவல் மறுஆய்வு விசாரணைகள் பற்றி தெரிந்துகொள்ளவும்: https://www.irb-cisr. gc.ca/en/hearings-reviews/Pages/DetRevMot.aspx.

## முக்கிய அறிவிப்பு

இந்தக் கையேடு  ஒரு பிணை நபராக இருப்பது குறித்த பொதுவான தகவல்களை வழங்குகிறது. இது சட்ட ஆலோசனையாக கருதப்படவில்லை அல்லது வழங்கப்படவில்லை.